सत्यमेव जयते

# भारत का राजपत्र

# The Gazette of India

# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

**சிறப்பிதழ்**

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

**பகுதி XV பிரிவு 1**

प्राधिकार प्राकारित

**PUBLISHED BY AUTHORITY**

**அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது**

---

नई दिल्ली, गुरुवार, 14 अकतूबर 1999/1921 सका

New Delhi, Thursday, 14th October 1999/1921 Saka

புது தில்லி, வியாழக்கிழமை 14, அக்டோபர் 1999/1921 சக

---

## Ministry of Law, Justice and Company Affairs

(Legislative Department) New Delhi

சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம் (சட்டமியற்றுத் துறை), புது தில்லி

The Translation in Tamil of the Departmental Inquiries (Enforcement of Attendance of Witnesses and Production of Documents) Act, 1972 (18 of 1972), The Anti-Apartheid (United Nations Convention) Act, 1981 (48 of 1981), The Railway Property (Unlawful Prossession), Act, 1966 (29 of 1966), The Presidents Emoluments and Pension Act, 1951 (30 of 1951), The Water (Prevention and Control of Pollution) Cess Act, 1977 (36 of 1977), The Dramatic Performances Act, 1876 (19 of 1876), The Delivery of Books and Newspapers (Public Libraries) Act, 1954 (27 of 1954), The Forfeited Deposits Act, 1850 (25 of 1850), The Family Courts Act, 1984 (66 of 1984), The Seamen's Provident Fund Act, 1966 (4 of 1966), The Agricultural and Processed Food Products Export Development Authority Act, 1985 (2 of 1986), The Administrative Tribunals Act, 1985 (13 of 1985) are hereby published under the Authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under Clause (a) of Section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

துறை விசாரணைகள் (சாட்சிகளை முன்னிலையாகும்படியும் ஆவணங்களை முன்னிலைப்படுத்தும்படியும் கட்டாயப்படுத்துதல்) சட்டம், 1972 (18/1972), இன ஒதுக்கல் ஒழிப்பு (ஐக்கிய நாடுகள் இணங்காறு) சட்டம், 1981 (18/1981), இருப்பூர்தியச் சொத்து (சட்ட முரணான உடைமை) சட்டம், 1966 (29/1966), குடியரசுத் தலைவரின் பதவியூதியங்கள் மற்றும் ஓய்வூதியச் சட்டம், 1951 (30/1951), நீர் (மாசுத்தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல்வரிச்சட்டம், 1977 (36/1977), நாடகக்கலை நிகழ்ச்சிகள் சட்டம், 1876 (19/1876), நூல்களையும் செய்தித்தாள்களையும் வழங்குதல் (பொது நூலகங்கள்) சட்டம், 1954 (27/1954), பறிமுதல் செய்யப்பட்ட வைப்பீடுகள் சட்டம், 1850 (25/1850), குடும்ப நீதி மன்றங்கள் சட்டம், 1984 (66/1984), கடலோடிகள் வருங்கால வைப்பு நிதியச்சட்டம், 1966 (4/1966), வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் ஏற்றுமதி வளர்ச்சி அதிகார அமைப்புச் சட்டம், 1985 (2/1986) நிருவாகப்பணித் தீர்ப்பாயங்கள் சட்டம், 1985, (13/1985), ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச்சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு (அ)வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

[Price Rs. 71.00]

# குடும்ப நீதிமன்றங்கள் சட்டம், 1984

## (சட்ட எண் 66/1984)

*[1984, செப்டம்பர் 14]*

திருமணம் மற்றும் குடும்ப அலுவல்கள் தொடர்பான பூசல்களில் இணக்கம் ஏற்படுத்தும் மற்றும் விரைவான தீர்வினைப் பெறும் கருத்துடன் குடும்ப நீதிமன்றங்களை நிறுவுவதற்கும் அதனுடன் இணைவுடைய பொருட்பாடுகளுக்கும் வகை செய்வதற்கான ஒரு சட்டம்.

இந்தியக் குடியரசின் முப்பத்து ஐந்தாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:—

### அத்தியாயம் I

### முன்னுரை

குறுந்தலைப்பு, அளாவுகை, மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம் குடும்ப நீதிமன்றங்கள் சட்டம், 1984 என்று வழங்கப்பெறும்.

(2) இது, ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, மைய அரசாங்கம் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் தேதியன்று செல்லாற்றல் பெறும் மற்றும் வெவ்வேறு தேதிகள் வெவ்வேறு மாநிலங்களுக்காகக் குறித்திடப்படலாம்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,—

(அ) "நீதிபதி" என்பது, குடும்ப நீதிமன்றத்தின் நீதிபதி அல்லது, நேர்வுக்கேற்ப, முதன்மை நீதிபதி, கூடுதல் முதன்மை நீதிபதி அல்லது பிற நீதிபதி என்று பொருள்படும்;

(ஆ) "அறிவிக்கை" என்பது, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்பட்ட ஓர் அறிவிக்கை என்று பொருள்படும்;

(இ) "வகுத்துரைக்கப்பட்ட" என்பது, இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்;

(ஈ) "குடும்ப நீதிமன்றம்" என்பது, பிரிவு 3இன் படி நிறுவப்பட்ட ஒரு குடும்ப நீதிமன்றம் என்று பொருள்படும்;

(உ) இந்தச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டு, ஆனால், பொருள் வரையறை செய்யப்படாத, ஆனால் உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1908இல் பொருள்வரையறை செய்யப்பட்ட சொற்களும், சொற்றொடர்களும், அந்தத் தொகுப்புச் சட்டத்தில் முறையே அவற்றிற்குக் குறித்தளிக்கப்பட்ட பொருள்களையே உடையனவாகும்.

### அத்தியாயம் II

### குடும்ப நீதிமன்றங்கள்

குடும்ப நீதிமன்றங்களை நிறுவுதல்.

3. (1) இந்தச் சட்டத்தால் ஒரு குடும்ப நீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்ட அதிகாரவரம்பை மற்றும் அதிகாரங்களைச் செலுத்தும் நோக்கத்திற்காக மாநில அரசாங்கம், உயர்நீதிமன்றத்தைக் கலந்தாய்வு செய்த பின்பும் அறிவிக்கை வாயிலாகவும்,—

(அ) இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்குப் பின்பு, கூடியவிரைவில், மக்கள்தொகை பத்து இலட்சத்திற்கு மேற்படுகிற மாநகரை அல்லது நகரை உள்ளடக்கியிருக்கிற மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு பரப்பிடத்திற்காகவும் குடும்ப நீதிமன்றத்தை நிறுவுதல் வேண்டும்;

(ஆ) அது தேவையெனக் கருதலாகும், அந்த மாநிலத்திலுள்ள பிற பரப்பிடங்களுக்காகக் குடும்ப நீதிமன்றங்களை நிறுவலாம்.

(2) மாநில அரசாங்கமானது, உயர்நீதிமன்றத்தைக் கலந்தாய்வு செய்தபின்பு, ஒரு குடும்ப நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு எந்தப் பரப்பிடங்களை அளாவிநிற்றல் வேண்டுமோ அந்தப் பரப்பிடங்களின் வட்டார எல்லைகளை அறிவிப்பின் வாயிலாகக் குறித்துரைக்கலாம் மற்றும் எந்த நேரத்திலும் அத்தகைய எல்லைகளை மிகுவிக்கலாம், குறைக்கலாம் அல்லது மாற்றலாம்.

4 (1) மாநில அரசாங்கமானது, உயர்நீதிமன்றத்தின் ஒருங்கிசைவுடன், ஒரு குடும்ப நீதிமன்றத்தின் நீதிபதியாக அல்லது நீதிபதிகளாக ஒருவரை அல்லது அதற்கு மேற்பட்டவர்களை அமர்த்தலாம். நீதிபதிகளை அமர்த்துதல்.

(2) குடும்ப நீதிமன்றம் ஒன்றுக்கு மேற்பட்ட நீதிபதிகளைக் கொண்டிருக்கும்போது,—

(அ) நீதிபதிகளில் ஒவ்வொருவரும், இந்தச் சட்டத்தால் அல்லது அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற ஏதேனும் சட்டத்தால் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் அனைத்தையும் அல்லது அவற்றுள் எதனையும் செலுத்தலாம்;

(ஆ) மாநில அரசாங்கமானது, உயர்நீதிமன்றத்தின் ஒருங்கிசைவுடன், நீதிபதிகளில் எவரையும் முதன்மை நீதிபதியாகவும் பிற நீதிபதிகளில் எவரையும் கூடுதல் முதன்மை நீதிபதியாகவும் அமர்த்தலாம்;

(இ) முதன்மை நீதிபதி, அப்போதைக்கப்போது, நீதிமன்ற அலுவல்களை அதன் பல்வேறு நீதிபதிகளுக்கு இடையே பகிர்ந்தளிப்பதற்குத் தான் பொருத்தமெனக் கருதலாகும் ஏற்பாடுகளைச் செய்யலாம்;

(ஈ) கூடுதல் முதன்மை நீதிபதி, முதன்மை நீதிபதியின் பதவியிடத்தில் ஒழிவிடம் ஏதேனும் ஏற்படுமாயின் அல்லது முதன்மை நீதிபதி வராமை, நலக்குறைவு அல்லது பிற ஏதேனும் காரணத்தால் தமது அலுவற்பணிகளை ஆற்ற இயலாதவராகிறபோது, முதன்மை நீதிபதியின் அதிகாரங்களைச் செலுத்தலாம்.

(3) ஒருவர்,—

(அ) இந்தியாவில் நீதித்துறைப் பதவி அல்லது ஒரு தீர்ப்பாயத்தின் ஓர் உறுப்பினர் பதவி அல்லது ஒன்றியத்தின் அல்லது ஒரு மாநில சட்டத்தில் சிறப்பு அறிவு தேவைப்படுகிற பணியிட அமைவு எதனையும் குறைந்தது ஏழாண்டுகள் ஏற்றிருந்தார், அல்லது

(ஆ) ஓர் உயர்நீதிமன்றத்தில் அல்லது அடுத்தடுத்து இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நீதிமன்றங்களில் குறைந்தது ஏழாண்டுகள் ஒரு வழக்குரைஞராக இருந்தார், அல்லது

(இ) மைய அரசாங்கமானது, இந்தியாவின் தலைமை நீதிபதியின் ஒருங்கிசைவுடன் வகுத்துரைக்கலாகும் பிற தகுதிப்பாடுகளை உடையவராகியிருக்கிறார்,

என்றாலன்றி, ஒரு நீதிபதியாக அமர்த்தப்படுவதற்குத் தகுதிப்பாட்டை உடையவர் ஆகார்.

(4) நீதிபதிகளாக அமர்த்தப்படுவதற்காக ஆட்களைத் தெரிவு செய்கையில்—

(அ) திருமணத்தின் மரபினை காத்துப் பேணுவதும் குழந்தைகளின் நலனை மேம்படுத்துவதும் இன்றியமையாததென உறுதி பூண்டவர்களாகவும் ஒப்புரவிளக்கம் மற்றும் அறிவுரை கூறுதல் வாயிலாக பூசல்களைத் தீர்த்துக் கொள்வதை ஊக்குவிப்பதற்குத் தங்களுடைய பட்டறிவு, சிறப்பறிவுத் திறம் ஆகியவை காரணமாகத் தகுதிபெற்றவர்களாகவும் இருப்பவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதை உறுதி செய்வதற்கு ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுதல் வேண்டும்.

(5) ஆள் எவரும், அவர் அறுபத்து இரண்டு வயது நிறைவெய்திய பின்பு ஒரு குடும்ப நீதிமன்றத்தின் நீதிபதியாக அமர்த்தப்படுதலோ அல்லது பதவி ஏற்றிருத்தலோ ஆகாது.

(6) ஒரு நீதிபதிக்கு வழங்கத்தக்க வரையூதியம் அல்லது மதிப்பூதியம் மற்றும் பிற படித்தொகைகள் மற்றும் அவருடைய பிற பணி வரையுரைகள் மற்றும், வரைக்கட்டுகள், மாநில அரசாங்கம் உயர்நீதிமன்றத்துடன் கலந்தாய்வு செய்து வகுத்துரைக்கலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

சமூக நல் வாழ்வு முகவாண்மைகள் முதலிய வற்றுடன் இசைந்திருத்தல்.

5. மாநில அரசாங்கமானது, உயர்நீதிமன்றத்தைக் கலந்தாய்வு செய்து, விதிகள் வாயிலாக, அந்த விதிகளில் குறித்துரைக்கப்படலாகும் முறையிலும், நோக்கங்களுக்காகவும் வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு—

(அ) சமூக நல்வாழ்வில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் அல்லது அமைப்புகள் அல்லது அவற்றின் சார்பாற்றுநர்கள்,

(ஆ) குடும்ப நலனை மேம்படுத்துவதில் தொழில்முறையில் ஈடுபட்டுள்ளவர்கள்,

(இ) சமூக நல்வாழ்வுக் களத்தில் பணிபுரிகிறவர்கள்,

(ஈ) இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்கு இணங்க எந்த ஆள் குடும்ப நீதிமன்றத்துடன் இணைந்திருப்பது அதன் அதிகார வரம்புகளை இன்னும் திறம்படச் செலுத்துவதற்கு அதனை இயல்விக்கக்கூடுமோ அந்தப் பிற ஆள் எவரும்,

ஒரு குடும்ப நீதிமன்றத்துடன் இசைந்திருப்பதற்கு வகை செய்யலாம்.

குடும்ப நீதிமன்றங்களின் வழக் குரைஞர்கள் அலுவலர்கள் மற்றும் பிற வேலை பெறுநர்கள்.

6.(1) மாநில அரசாங்கமானது, உயர்நீதிமன்றத்துடன் கலந்தாய்வு செய்து, ஒரு குடும்ப நீதிமன்றம் தன் அலுவற்பணிகளை ஆற்றுகையில் அதற்கு உதவுவதற்குத் தேவைப்படுகிற வழக்குரைஞர்கள், அலுவலர்கள் மற்றும் பிற வேலை பெறுநர்களின் எண்ணிக்கையையும், வகைகளையும் தீர்மானித்தல் வேண்டும், மற்றும் தான் பொருத்தமெனக் கருதலாகும் வழக்குரைஞர்கள், அலுவலர்கள் பிற வேலை பெறுநர்கள் ஆகியோரை குடும்ப நீதிமன்றத்திற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1) இல் குறிப்பிடப்பட்ட வழக்குரைஞர்கள் இசைந்திருப்பதற்கான வரையுரைகளும் வரைக்கட்டுகளும் மற்றும் அலுவலர்கள் மற்றும் வேலை பெறுநர்களின் பணிவரையுரைகளும் வரைக்கட்டுகளும், மாநில அரசாங்கத்தால் வகுக்கப்பட்ட விதிகளில் குறித்துரைக்கப்படலாகுமாறு இருத்தல் வேண்டும்.

## அத்தியாயம் III

## அதிகாரவரம்பு

அதிகார வரம்பு.

7.(1) இந்தச் சட்டத்தின் பிற வகையங்களுக்கு உட்பட்டு ஒரு குடும்ப நீதிமன்றமானது—

(அ) விளக்கத்தில் குறிப்பிடப்பட்ட தன்மையதான உரிமை வழக்குகள் மற்றும் நடவடிக்கையைப் பொறுத்தமட்டில், அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதன்படியும், மாவட்ட நீதிமன்றம் எதனாலும் அல்லது கீழமை உரிமையியல் நீதிமன்றம் எதனாலும் செலுத்தத்தக்க அதிகாரவரம்பு அனைத்தையும் உடையதாயிருத்தலும் செலுத்துதலும் வேண்டும்; மற்றும்

(ஆ) அத்தகைய அதிகாரவரம்பினை அத்தகைய சட்டத்தின்படி செலுத்தும் நோக்கங்களுக்காக, குடும்ப நீதிமன்றத்தின் அதிகார வரம்பு எந்தப் பரப்பிடத்திற்கு அளாவி நிற்கிறதோ அந்தப் பரப்பிடத்திற்கான மாவட்ட நீதிமன்றமாக அல்லது, நேர்வுக்கேற்ப, அத்தகைய கீழமை உரிமையியல் நீதிமன்றமாகக் கருதப்படுதல் வேண்டும்.

விளக்கம்.—இந்த உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட உரிமை வழக்குகளும் நடவடிக்கைகளும் பின்வரும் தன்மையதான உரிமை வழக்குகளும் நடவடிக்கைகளும் ஆகும். அவையாவன—

(அ) திருமணத்தை செல்லா நிலையதாக்குவதற்கான (அந்தத் திருமணம் இல்லா நிலையதாகும் அல்லது, நேர்வுக்கேற்ப, அந்தத் திருமணம் செல்லா நிலையதாக்கப்பட்டது என்று விளம்புகிற அல்லது மணவாழ்வு உரிமைகளை மீட்பதற்கான அல்லது நீதி முறைப் பிரித்துறைத்தலுக்கான அல்லது மண உறவு தீர்த்தலுக்கான ஒரு தீர்ப்பாணைக்காக ஒரு திருமணத் தரப்பினர்களுக்கிடையேயான ஓர் உரிமை வழக்கு அல்லது நடவடிக்கை;

(ஆ) ஒரு திருமணத்தின் செல்லுந்தன்மை குறித்து அல்லது ஆள் எவரின் மணவாழ்வின் செல்லும்நிலை குறித்த ஒரு விளம்புகைக்கான ஓர் உரிமை வழக்கு அல்லது நடவடிக்கை;

(இ) திருமணத் தரப்பினர்களுடைய அல்லது அவர்கள் இருவரில் ஒருவருடைய சொத்தினைப் பொறுத்து அந்தத் தரப்பினர்களுக்கிடையே உள்ள ஓர் உரிமை வழக்கு அல்லது நடவடிக்கை;

(ஈ) ஓர் ஆணை அல்லது உறுத்துக்கட்டளைக்காக மணஉறவு முறையினின்று எழுகிற ஓர் உரிமை வழக்கு அல்லது நடவடிக்கை;

(உ) ஆள் எவரின் சட்டமுறைமை குறித்த விளம்புகைக்கான ஓர் உரிமை வழக்கு அல்லது நடவடிக்கை;

(ஊ) பேணுகைக்கான உரிமை வழக்கு அல்லது நடவடிக்கை;

(எ) ஒருவரின் காப்பாண்மை அல்லது உரிய வயதடையாதவர் எவரின் காப்படைவு அல்லது அவரை அணுகுவதற்கான வாய்ப்பு தொடர்பான ஓர் உரிமை வழக்கு அல்லது நடவடிக்கை.

(2) இந்தச் சட்டத்தின் பிறவகையங்களுக்கு உட்பட்டு ஒரு குடும்ப நீதிமன்றம்—

(அ) குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973 இன் (மனைவி, குழந்தைகள் பெற்றோர் ஆகியோரின் பேணுக்கைக்கான ஆணை தொடர்பான) அத்தியாயம் IX இன்படி முதல்வகுப்புக் குற்றவியல் நடுவர் ஒருவரால் செலுத்தத்தக்க அதிகாரவரம்பினை, மற்றும்

(ஆ) பிற செய்சட்டம் எதனாலும் அதற்கு வழங்கப்படலாகும் பிற அதிகார வரம்பினை,

கொண்டிருத்தலும் செலுத்தலும் வேண்டும்.

அதிகார வரம்பினை நீக்குதல் மற்றும் முடிவுறா நிலையிலுள்ள நடவடிக்கைகள்.

8. ஒரு குடும்ப நீதிமன்றம் ஏதேனும் பரப்பிடத்திற்காக நிறுவப்பட்டிருக்கிறவிடத்து—

(அ) பிரிவு 7 இன் உட்பிரிவு (1) இல் குறிப்பிடப்பட்ட மாவட்ட நீதிமன்றம் எதுவும் அல்லது ஏதேனும் கீழமை உரிமையியல் நீதிமன்றம் அத்தகைய பரப்பிடம் தொடர்பாக அந்த உட்பிரிவின் விளக்கத்தில் குறிப்பிடப்பட்ட தன்மையதான உரிமை வழக்கு அல்லது நடவடிக்கை எதனையும் பொறுத்தமட்டில் அதிகார வரம்பு எதனையும் கொண்டிருத்தலோ அல்லது செலுத்துதலோ ஆகாது;

(ஆ) குற்றவியல் நடுவர் எவரும் அத்தகைய பரப்பிடம் தொடர்பாக குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973 இன் பகுதி IX இன்படி அதிகார வரம்பு எதனையும் கொண்டிருத்தலோ அல்லது அதிகாரம் எதனையும் செலுத்துதலோ ஆகாது;

(இ)(i) பிரிவு 7 இன் உட்பிரிவு (1) இல் குறிப்பிடப்பட்ட மாவட்ட நீதிமன்றம் அல்லது கீழமை நீதிமன்றம் எதனின் முன்பும் அல்லது, நேர்வுக்கேற்ப, மேற்சொன்ன தொகுப்புச் சட்டத்தின்படி குற்றவியல் நடுவர் எவரின் முன்பு, குடும்ப நீதிமன்றம் நிறுவப்படுவதற்கு அடுத்த முன்பு முடிவுறா நிலையிலிருந்து மற்றும்,

(ii) அத்தகைய உரிமை வழக்கு அல்லது நடவடிக்கை தொடுக்கப்பட்டிருந்த அல்லது எடுக்கப்பட்டிருந்த தேதிக்கு முன்பு, இந்தச் சட்டம் செல்லாற்றலுக்கு வந்திருந்து அத்தகைய குடும்ப நீதிமன்றம் நிறுவப்பட்டிருக்குமாயின், அத்தகைய குடும்ப நீதிமன்றத்தின் முன்பு தொடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படுமாறு கோரப்பட்டிருந்திருக்கக் கூடிய

அந்த உட்பிரிவின் விளக்கத்தில் குறிப்பிடப்பட்ட தன்மையதான உரிமை வழக்கு அல்லது நடவடிக்கை ஒவ்வொன்றும் அல்லது குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973 இன் அத்தியாயம் IX இன்படி நடவடிக்கை ஒவ்வொன்றும், ஒரு குடும்ப நீதிமன்றம் நிறுவப்பட்ட தேதியன்று அதனிடம் மாற்றல் செய்யப்பட்டு நிற்கும்.

2/1974

## அத்தியாயம் IV

### நெறிமுறை

தீர்வுக்கான முயற்சி செய்தல் குடும்ப நீதிமன்றத்தின் கடமை.

9.(1) உரிமை வழக்கு அல்லது நடவடிக்கை ஒவ்வொன்றிலும், அந்த உரிமை வழக்கு அல்லது நடவடிக்கையின் நுதல்-பொருளைப் பொறுத்துத் தீர்வுக்கு வருகையில், தரப்பினர்களுக்கு உதவுவதற்கு மற்றும் அவர்களை இணங்கச் செய்வது இயலக்கூடியதாக இருக்கிறவிடத்து முதல்நேர்வில், குடும்ப நீதிமன்றத்தால் அவ்வாறு செய்யப்படுதல் வேண்டும். மற்றும் ஒரு குடும்ப நீதிமன்றம் இந்த நோக்கத்திற்காக, உயர் நீதிமன்றத்தால் வகுக்கப்பட்ட விதிகள் எவற்றிற்கும் உட்பட்டு, அது தக்கதெனக் கருதலாகும் நெறிமுறைகளைப் பின்பற்றலாம்.

(2) உரிமை வழக்கு அல்லது நடவடிக்கை எதிலும், எந்தக் கட்டத்திலும் தரப்பினர்களுக்கு இடையே தீர்வுக்குத் தகுமான வாய்ப்பு இருக்கிறது என்பதாக குடும்ப நீதிமன்றத்திற்கு தோன்றுமாயின், அந்தக் குடும்ப நீதிமன்றமானது, அத்தகைய தீர்வினை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை இயல்விப்பதற்குப் பொருத்தமென அது கருதுகிற கால அளவிற்கு நடவடிக்கைகளை ஒத்திப்போடலாம்.

(3) உட்பிரிவு (2) இல் வழங்கப்பட்ட அதிகாரம், நடவடிக்கைகளை ஒத்திப்போடுவதற்கான குடும்ப நீதிமன்றத்தின் பிற அதிகாரம் எதற்கும் கூடுதலாக இருக்கும். ஆனால் திறக்குறைவு செய்வதாக இராது.

பொதுவான நடைமுறை.

10.(1) இந்தச் சட்டத்தின் மற்றும் விதிகளின் பிற வகையங்களுக்கு உட்பட்டு, உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1908 இன் மற்றும் அப்போதைக்குச் செல்லாற்றலிலிருந்த பிற ஏதேனும் சட்டத்தின் வகையங்கள், ஒரு குடும்ப நீதிமன்றத்தின் முன்புள்ள உரிமை வழக்குகளுக்கும் குற்றவியல் நெறிமுறைத் தொகுப்பு சட்டம், 1973 இன் அத்தியாயம் IX இன் படியான நடவடிக்கைகள் அல்லாத பிற நடவடிக்கைகளுக்கும் பொருந்தும், மற்றும் தொகுப்புச் சட்டத்தின் மேற்சொன்ன வகையங்களின் நோக்கங்களுக்காக ஓர் உரிமையியல் நீதிமன்றமாகக் கருதப்படுதல் வேண்டும், மற்றும் அத்தகைய நீதிமன்றத்தின் அதிகாரம் அனைத்தையும் கொண்டிருக்கும்.

(2) இந்தச் சட்டத்தின் மற்றும் விதிகளின் பிற வகையங்களுக்கு உட்பட்டு, குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973 இன் வகையங்கள் அல்லது அதன்படி வகுக்கப்பட்ட விதிகள், ஒரு குடும்ப நீதிமன்றத்தின் முன்பு அந்தத் தொகுப்புச் சட்டத்தின் அத்தியாயம் IX இன்படியான நடவடிக்கைகளுக்குப் பொருந்தும்.

(3) உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (2) இல் உள்ள எதுவும், உரிமைவழக்கு அல்லது நடவடிக்கைகளின் நுதல் பொருளைப் பொறுத்த தீர்வுக்கான அல்லது ஒரு தரப்பினரால் சொல்லப்பட்டு மற்றவரால் மறுதலிக்கப்பட்ட பொருண்மைகளின் உண்மையைப் பெறுவதற்கான நோக்கத்துடன் தன்னுடைய நெறிமுறையை விதிப்பதினின்று ஒரு குடும்ப நீதிமன்றத்தைத் தடுத்தல் ஆகாது.

தனிமை முறையில் நடத்தப்படும் நடவடிக்கைகள்.

11. இந்தச் சட்டம் பொருந்துகிற ஒவ்வோர் உரிமை வழக்கிலும் அல்லது நடவடிக்கைகளிலும், குடும்ப நீதிமன்றம், தனி அரங்கில் நடவடிக்கைகள் நடத்தப்படலாம் என்று விரும்புமாயின் அவ்வாறு நடத்தப்படலாம், மற்றும் தரப்பினரில் எவரும் அவ்வாறு விரும்புவாராயின், அவ்வாறு நடத்தப்படுதல் வேண்டும்.

மருத்துவ மற்றும் நல்வாழ்வு வல்லுநர்களின் உதவி.

12. ஒவ்வோர் உரிமை வழக்கிலும் அல்லது நடவடிக்கைகளிலும், இந்தச் சட்டத்தினால் சுமத்தப்பட்ட அலுவற்பணிகளை ஆற்றுகையில், குடும்ப நீதிமன்றத்திற்கு உதவும் நோக்கங்களுக்காக, மருத்துவ வல்லுநரின் அல்லது நீதிமன்றம் தக்கதெனக் கருதலாகும் குடும்ப நலனை மேம்படுத்துவதில் தொழில்முறையில் ஈடுபட்டிருக்கிற ஒருவர் உள்ளடங்கலாக, தரப்பினர்களுக்கு உறவினர் இருந்தாலும், இல்லாவிட்டாலும், அத்தகையவரின் (கிடைக்கத்தக்கவிடத்து பெண்ணாக இருந்தால் நலம்) பணிகளைப் பெற ஒரு குடும்ப நீதிமன்றத்திற்குத் தடையில்லை.

சட்டமுறைச் சார்பாற்றத்திற்கு உரிமை.

13. சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், ஒரு குடும்ப நீதிமன்றத்தின் முன்புள்ள ஓர் உரிமைவழக்கு அல்லது நடவடிக்கைக்குரிய தரப்பினர் எவரும், சட்டத் தொழிலாற்றுநரால், சார்பாற்றம் செய்யப்படுவதற்கு உரிமை கொண்டாடும் வகையில் உரிமை கொண்டவராகார்.

வரம்புரையாக: குடும்ப நீதிமன்றம் நீதியின் நலனை முன்னிட்டு, அது தேவையெனக் கருதுமாயின், நீதிமன்ற உதவியராக, சட்ட வல்லுநர் ஒருவரின் உதவியை நாடலாம்.

இந்தியச் சான்று சட்டம், 1872 பொருந்துதல்.

14. ஒரு குடும்ப நீதிமன்றம், இந்தியச்சான்றுச் சட்டம், 1872 இன்படி, அது பிறவாறு தொடர்புற்றதாக அல்லது ஏற்கத்தக்கதாக இருந்திருக்கக்கூடியதாயினும் அல்லது இல்லாவிடினும், ஒரு பூசலைத் திறம்படக் கையாளுவதற்கு உதவலாம் என்று கருதுமாயின், அத்தகைய அறிவிக்கை, விவரவுரை, ஆவணங்கள், தகவல் அல்லது பொருட்பாடு எதனையும் சான்றாகப் பெறலாம்.

வாய்மொழிச் சான்றின் பதிவு.

15. ஒரு குடும்ப நீதிமன்றத்தின் முன்புள்ள உரிமை வழக்குகளில் அல்லது நடவடிக்கைகளில் சான்றுரைஞர்களின் சான்றினை விரிவாகப்பதிவு செய்ய வேண்டிய தேவையில்லை. ஆனால் நீதிபதி, ஒவ்வொரு சான்றுரைஞரின் விசாரணையும் நடந்துகொண்டிருக்கையில், சான்றுரைஞருடைய சான்றுரையின் பொருள்பற்றிய விவரக்குறிப்பு ஒன்றினைப் பதிவு செய்தல் வேண்டும் அல்லது பதிவு செய்யப்படும்படி செய்தல் மற்றும் அத்தகைய விவரக்குறிப்பு, சான்றுரைஞராலும் நீதிபதியாலும் கையொப்பமிடப்படுதல் வேண்டும் மற்றும் அது பதிவின் பகுதியாக அமைதல் வேண்டும்.

ஆணையுறுதி ஆவணத்தின் பேரில் முந்திய இயல்பு குறித்த சான்று.

16.(1) எவரேனும் ஒருவரின் சான்று முந்திய இயல்பு குறித்ததாயிருக்கிறவிடத்து, அத்தகை சான்று, ஆணையுறுதி ஆவணம் வாயிலாகக் கொடுக்கப்படலாம், மற்றும் தகுமான விலக்குகள் அனைத்திற்கும் உட்பட்டு, ஒரு குடும்ப நீதிமன்றத்தின் முன்புள்ள உரிமை வழக்கு அல்லது நடவடிக்கை எதிலும் சான்றாகப் படிக்கப்படலாம்.

(2) குடும்ப நீதிமன்றமானது, உரிமை வழக்கு அல்லது நடவடிக்கையின் தரப்பினர்களில் எவரின் விண்ணப்பித்தின்பேரிலும், அத்தகையவருக்கு, ஆணையுறுதி ஆவணத்தில் அடங்கியுள்ள பொருண்மைகள் குறித்து, அவருக்கு அழைப்பாணை விடுத்து விசாரணை செய்வது பொருத்தமெனக் கருதுமாயின், விசாரணை செய்யலாம் மற்றும் செய்தல் வேண்டும்.

தீர்ப்பு.

17. ஒரு குடும்ப நீதிமன்றத்தின் தீர்ப்பு, வழக்கின் சுருக்கமான விவரவுரை, தீர்மானத்திற்கான கூறு, அதன் பேரிலான முடிவு, அத்தகைய முடிவிற்கான காரணங்கள் ஆகியவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

தீர்ப்பாணைகளையும் ஆணைகளையும் நிறைவேற்றுதல்.

18.(1) குடும்ப நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை ஒன்று அல்லது குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973இன் அத்தியாயம் IXஇன்படியான ஓர் ஆணையில்லாத பிற ஆணை ஒன்று, ஒரு உரிமையியல் நீதிமன்றத்தின் ஒரு தீர்ப்பாணையை அல்லது ஆணையைப் போன்ற அதே செல்லாற்றலையும் செல்திறத்தையும் உடையதாயிருக்கும், மற்றும் தீர்ப்பாணைகளையும் ஆணைகளையும் நிறைவேற்றுவதற்காக உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1908இல் வகுத்துரைக்கப்பட்டவாறு அதே முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2) குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973இன் அத்தியாயம் IXஇன்படி ஒரு குடும்ப நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒன்று, அந்தத் தொகுப்புச் சட்டத்தால் அத்தகைய ஆணையை நிறைவேற்றுவதற்காக வகுத்துரைக்கப்பட்ட முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(3) ஒரு தீர்ப்பாணை அல்லது ஆணையானது, அந்தப் பிறப்பித்த குடும்ப நீதிமன்றத்தால், அல்லது நிறைவேற்றுகைக்காக அது அனுப்பப்பட்ட பிற குடும்ப நீதிமன்றத்தால் அல்லது பொதுவகை உரிமையியல் நீதிமன்றத்தால் நிறைவேற்றப்படலாம்.

## அத்தியாயம் V

## மேல்முறையீடுகள் மற்றும் மேலாய்வுகள்

மேல்முறையீடு.

19.(1) உட்பிரிவு (2)இல் வகை செய்யப்பட்டவாறல்லாமல் மற்றும் உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1908 இன் அல்லது குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973இன் அல்லது பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், பொருண்மைகள் மற்றும் சட்டம் ஆகிய இரண்டின்பேரிலும், ஒரு குடும்ப நீதிமன்றத்தின் ஒவ்வொரு தீர்ப்பிலிருந்தும் அல்லது வழக்கிடை ஆணையாக இல்லாத ஆணையிலிருந்தும் உயர் நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு ஒன்று உண்டு.

(2) தரப்பினர்களின் இசைவுடன், குடும்ப நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை அல்லது ஆணை ஒன்றிலிருந்து அல்லது குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973இன் அத்தியாயம் IX இன்படி, பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒன்றிலிருந்து மேல்முறையீடு எதுவும் கிடையாது:

வரம்புரையாக: குடும்ப நீதிமன்றங்கள் (திருத்தம்) சட்டம், 1991 இன் தொடக்கத்திற்கு முன்பு, குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973 இன் அத்தியாயம் IXஇன்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை எதற்கும், அல்லது உயர்நீதிமன்றத்தின் முன்பு நடப்பில் உள்ள மேல்முறையீடு எதற்கும் இந்த உட்பிரிவில் உள்ள எதுவும் பொருந்துதல் ஆகாது.

(3) இந்தப் பிரிவின்படியான மேல்முறையீடு ஒவ்வொன்றும், ஒரு குடும்ப நீதிமன்றத்தின் தீர்ப்பு அல்லது ஆணைத் தேதியிலிருந்து முப்பது நாள் கால அளவுக்குள் முன்னிடப்படுதல் வேண்டும்.

(4) உயர் நீதிமன்றமானது, தாமே முற்பட்டோ அல்லது பிறவாறாகவோ குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973இன் அத்தியாயம் IXஇன்படி பிறப்பிக்கப்பட்ட வழக்கிடை ஆணையல்லாத ஆணை ஒன்றை பிறப்பித்துள்ளதும் தனது அதிகாரவரம்பிற்குள் உள்ளதுமான குடும்ப நீதிமன்றத்தின் நடவடிக்கை எதனையும், அதன் சீர்மை, சட்ட முறைமை, விதிமுறை பற்றி அது தெளிவுறக்காணும் நோக்கத்திற்காகவும் அந்த நடவடிக்கையின் ஒழுங்கு குறித்த பதிவணம் எதனையும் தருவித்து ஆய்வு செய்யலாம்.

(5) மேற்கூறப்பட்டுள்ளவாறு தவிர, ஒரு குடும்ப நீதிமன்றத்தின் தீர்ப்பு, ஆணை அல்லது தீர்ப்பாணை எதிலிருந்து நீதிமன்றம் எதற்கும் மேல்முறையீடு அல்லது மேலாய்வு எதுவும் கிடையாது.

(6) உட்பிரிவு (1)இன்படி முன்னிடப்பட்ட மேல்முறையீடு ஒன்று, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நீதிபதிகளைக் கொண்டிருக்கிற ஒரு தீர்ப்பாயத்தால் கேட்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் VI

### பல்வகைப்பட்டவை

20. இந்தச் சட்டத்தின் வகையங்கள், அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அல்லது இந்தச் சட்டம் அல்லாத பிற சட்டம் எதனின் பயன் திறனால் செல்திறம் உடைய முறையாவணம் எதிலும், அடங்கியுள்ளதற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், செல்திறம் உடையதாகும்.

இந்தச் சட்டம் மேலோங்கி நிற்கும் செல்திறம் உடையதாகும்.

21.(1) உயர் நீதிமன்றமானது, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகத் தேவையெனக் கருதலாகும் விதிகளை வகுக்கலாம்.

விதிகளை வகுக்க உயர் மன்றத்திற்குள்ள அதிகாரம்.

(2) குறிப்பாகவும், மேற்சொன்ன அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும், அத்தகைய விதிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றுள் எதற்கும் வகைசெய்யலாம், அவையாவன—

(அ) குடும்ப நீதிமன்றங்களின் வழக்கமான வேலை நேரங்கள் மற்றும் விடுமுறை நாட்களிலும் வழக்கமான வேலை நேரங்களுக்குப் பின்பும் குடும்ப நீதிமன்றங்கள் அமர்வுகளை நடத்துதல்;

(ஆ) குடும்ப நீதிமன்றங்கள் அதனுடைய வழக்கமான அமர்வு இடங்கள் அல்லாத பிற இடங்களில் அமர்வுகளை நடத்துதல்;

(இ) ஒரு தீர்விற்கு வருவதற்கு தரப்பினர்களுக்கு உதவுவதற்கும் அவர்களை இணங்க வைப்பதற்கும் ஒரு குடும்ப நீதிமன்றத்தால் செய்யப்படலாகும் முயற்சிகள் மற்றும் பின்பற்றப்படலாகும் நெறிமுறை.

22.(1) மைய அரசாங்கமானது, இந்தியாவின் தலைமை நீதிபதியின் ஒருங்கிசைவுடன், அறிவிக்கை வாயிலாக, பிரிவு 4இன் உட்பிரிவு (3)இன் கூறு (அ)இல் குறிப்பிடப்பட்ட ஒரு நீதிபதியின் அமர்த்துகைக்கான பிற தகுதிப்பாடுகளை வகுத்துரைக்கும் விதிகளை வகுக்கலாம்.

விதிகளை வகுக்க மைய அரசாங்கத் திற்குள்ள அதிகாரம்.

(2) மைய அரசாங்கத்தால் இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்படும் விதி ஒவ்வொன்றும், அது வகுக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும், அது ஒரு கூட்டத்தொடராகவோ அல்லது இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்தக் கூட்டத்தொடர்களாகவோ மொத்தம் முப்பது நாட்களைக் கொண்ட ஒரு காலஅளவிற்கு அமர்வில் இருக்கையில், அதன்முன் வைக்கப்படுதல் வேண்டும். மேற்கூறப்பட்ட கூட்டத்தொடரை அல்லது அடுத்தடுத்தக் கூட்டத்தொடர்களை உடனடியாகத் தொடர்ந்து வரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அந்த விதியில் மாற்றமைவு எதனையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அல்லது அந்த விதி வகுக்கப்படுதல் ஆகாது என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன் பின்பு, அந்த விதி அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும், அல்லது, நேர்வுக்கேற்ப, செல்திறம் இல்லாதுபோகும்; எனினும், அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும் அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

விதிகளை வகுக்க மாநில அரசாங்கத்திற்குள்ள அதிகாரம்.

23.(1) மாநில அரசாங்கமானது, உயர் நீதிமன்றத்துடன் கலந்தாய்வு செய்தபின்பு, அறிவிக்கை வாயிலாக இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளை வகுக்கலாம்.

(2) குறிப்பாகவும், உட்பிரிவு (1) இன் வகையங்களின் பொதுத்தன்மைக்குக் குந்தகமின்றியும், அத்தகைய விதிகள், பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றுள் எதற்கும் வகை செய்யலாம், அவையாவன:-

(அ) பிரிவு 4இன் உட்பிரிவு (6)இன்படி நீதிபதிகளுக்கு வழங்கத்தக்க வரைவூதியம் அல்லது மதிப்பூதியம் மற்றும் பிறபடித்தொகைகள் மற்றும் அவர்களின் பிற வரையுரைகளும் வரைக்கட்டுகளும்;

(ஆ) பிரிவு 6இல் சுட்டப்பட்ட வழக்குரைஞர்கள் இசைந்திருப்பதற்கான வரையுரைகளும் வரைக்கட்டுகளும் மற்றும் அலுவலர்கள் மற்றும் பிற வேலை பெறுநர்களின் பணிவரையுரைகளும் வரைக்கட்டுகளும்;

(இ) மாநில அரசாங்கத்தின் வருவாய்களினின்று பிரிவு 12இல் சுட்டப்பட்ட மருத்துவ மற்றும் பிற வல்லுநர்களுக்கும் பிற ஆட்களுக்கும் கட்டணங்களையும் (பயணச் செலவுகள் உள்ளடங்கலான) செலவுகளையும் செலுத்துதல் மற்றும் அத்தகைய கட்டணங்கள் மற்றும் செலவுகளின் விகிதப்பாடுகள்;

(ஈ) மாநில அரசாங்கத்தின் வருவாய்களினின்று, நீதிமன்ற உதவியராக, பிரிவு 13இன்படி அமர்த்தப்பட்ட சட்டத்தொழிலாற்றுநர்களுக்கு கட்டணங்களையும் செலவுகளையும் செலுத்துதல் மற்றும் அத்தகைய கட்டணங்கள் மற்றும் செலவுகளின் விகிதப்பாடுகள்;

(உ) விதிகளினால் வகுத்துரைக்கப்பட்ட அல்லது வகைசெய்யப்பட வேண்டுமென்று கோரப்பட்ட, அல்லது வகுத்துரைக்கப்படலாகும் அல்லது வகைசெய்யப்படலாகும் பிற பொருட்பாடு எதுவும்.

(3) இந்தச் சட்டத்தின்படி, ஒரு மாநில அரசாங்கத்தால் வகுக்கப்பட்ட ஒவ்வொரு விதியும், அது வகுக்கப்பட்ட பின்பு, கூடியவிரைவில், மாநிலச் சட்டமன்றத்தின் முன்பு வைக்கப்படுதல்வேண்டும்.